Eye Camp at Avadi

* 645 *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that an eye-camp was held at Avadi in December 1973; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) இந்தக் கண் சிகிச்சை முகாமில் 767 பேருக்குக் கண் பரிசோதனை செய்யப்பட்டது. 176 பேருக்கு கண்படல அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இலவச மூக்குக் கண்ணுடிகள் வழங்கப்பட்டன. 119 பேருக்கு கண் தொடர் பான பிற நோய்களுக்காகச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

திரு. என். கே. பழனிசாமி : Myolinth activities என்ற தர்மம், தானம் போன்ற அடிப்படையில்—கண்ணுக்கு வருகிற வியாதியைப் போக்கக்கூடிய முறையில் வருஷாவருஷம்—எத்தனை வருஷத்திற்குச் செய்யப்படும்? இது தொடர்ந்து நடைபெற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நண்பர் பழனிசாமி மருத்துவ மனையில் பலகாலம் தங்கி இருந்தவர்கள். அங்கே உள்ளவர்களைக் கேட்டே இவற்றைத் தெரிந்துகொண்டிருக்கலாம். காட்ராக்ட் என்பது முதுமை காரணமாக கண்ணில் ஒரு சதைப் படலம் வளர்வது—அதனல் பார்வையை இழப்பது ஆகும். முதுமையைத் தடுக்க ஒன்றும் கிடையாது. வந்தவர் களுக்கு உதவி செய்வதுதான் நம் கடமை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெரிய உள்ளத்தோடு இத்திட்டத்தைத் தொடங்கிய காரணமாக அறுபத்திரண்டாயிரம் பேருக்கு ஒன்னேமுக்கால் ஆண்டுக்குள் அறுவை சிகிச்சை வழங்கப்பட்டிருக்கிறது. நாலு லட்சத்து, ஐம்பத்து மூன்று பேர்கள் இந்த முகாம்களில் புற நோயாளிகளாக சிகிச்சை பெற்றிருக்கிருர்கள். ஐநூற்று பதினைந்து பேர்களுக்கு வேறுவிதமான அறுவை சிகிச்சை கிடைத்திருக்கிறது. இது ஒரு மிகப் பெரிய மருத்துவத் தொண்டாக விளங்குகிறது.

திரு. சோ. அழகர்சாமி : இந்தக் கண் சிகிச்சை முகாம்களில் அதிகமான பேர்களுக்கு ஒரே நேரத்தில் அறுவை சிகிச்சை நடத்தப்பட்ட காரணத் தினல்—ஒரு சிலருக்கு முன்பு கொஞ்ச நஞ்சம் தெரிந்த பார்வையும் இப்போது

[1974 மார்ச் 28]

அடியோடு தெரியாமல் போய்விட்டது, அதனால் வேலை செய்து பிழைக்க முடியாதவர்களாக ஆகிவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்களுக்கு எல்லாம் மாதாமாதம் ஓய்வூதியமாக அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: காட்ராக்ட் என்பது மெள்ள மெள்ள பார்வை முழுவதும் இல்லாது போகிற அளவுக்கு கண்ணில் வளர்கிற மெல்லிய சதைப் படலமாகும். டிரான்ஸ்டேரன்டாக இருக்கிற உறுப்பு இதன் காரணமாக நான்-டிரான்ஸ்பேரன்ட் ஆக ஆகிவிடுகிறது. நான்-டிரான்ஸ்பேரன்டே ஆக ஆகிவிட்ட இந்த உறுப்பை அறுவை சிகிச்சை மூலம் எடுப்பது வெற்றி பெற்றாலும் கூட அவருக்குப் பார்வை தெரியாது. இந்த உறுப்பின் பயன் எதுவோ அந்தப் பயனை அளிக்கக்கூடிய கண்ணாடி போட்டால்தான் பார்வை தெரியும். கண்ணாடி போட்டும் தெரியவில்லை என்றால் வேறு குறைகள் இருக்கலாம். எல்லாவற்றையும் முழு அளவுக்குப் பரிசீலித்து, மறுபடியும் சிகிச்சை வழங்க வாய்ப்பு இருக்கிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: இப்படி இந்த முகாம்களை நடத்திக் கொண்டு வருகிறபோது நல்ல பயன் கிடைத்திருக்கிறது. நிரந்தரமாக—எங்கள் பகுதியில் கல்யாண மண்டபத்தில் கண் சிகிச்சை முகாம் நடக்கிறது, அப்படியின்றி—ஓரிடத்தில் இருந்து இந்த சிகிச்சை வழங்கும் ஏற்பாட்டை எதிர்காலத்தில் செய்வதற்கு முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இப்போது ஐந்து ஜோன் ஆகப் பிரித்து, ஐந்து மருத்துவக் குழுக்களோடு இணைக்கப்பட்டு, ஆங்காங்குள்ள மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படுகிறது. இடவசதிக் குறைவு இல்லாது, புதிய இடம் கிடைத்து 40 பேர்களுக்கு சிகிச்சை வழங்கக்கூடிய வசதியுள்ள இடத்தில் கண் மருத்துவ முகாம் மருத்துவமனை ஏற்பட்டிருக்கிறது—காம்ப் ஹாஸ்பிடல். இதுபோல கோயம்புத்தூர், திருச்சியில் உருவாகியிருக்கிறது. இடவசதி கிடையாது என்கிற நிலையில் எல்லா இடங்களுக்கும் இதுபோல செய்ய முடியாது என்றாலும் படிப்படியாக எல்லா மாவட்ட தலைநகரிலும் இடவசதி கிடைக்கிறபோது ஏற்பாடு செய்யலாம். மாவட்ட தலைநகரங்களில் உள்ள மருத்துவ மனையில் இப்போதே கண் சிகிச்சைப் பகுதி இருக்கிறது. ஒரு வாரத்தில் 40, 45 பேர்களுக்கு இடவசதி இருப்பதைப் பார்த்துச் செய்யப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த முகாம்களில் ஸ்டாப் போதுமான அளவு இல்லாத காரணத்தினால் வசதிக் குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறவர் மருத்துவக் கல்லூரியிலுள்ள கண் சிகிச்சைப் பிரிவு பேராசிரியர். அவருக்கு உதவியாக துணை, உதவி பேராசிரியர்கள், ரீடர்கள் டி.ஓ. பெற்றவர்களோ இருக்கிறார்கள். இவர்களுக்கு உதவியாக அசிஸ்டென்ட் சர்ஜன்ஸ். அவர்களுக்கு உதவியாக இப்படிப்பட்ட முகாம்களில் பணியாற்றும் பயிற்சி பெற்ற செவிலியர்கள். அவர்களுக்கு உதவியாக அந்த அந்தப் பகுதியிலுள்ள கல்லூரியில் பயிற்சி பெறும் மாணவர்கள், இன்னும் அலுவலர்கள் இடம் பெறுகிறார்கள். ஒத்துழைப்பு நல்குவதற்கு ஸ்கவுட்ஸ் இடம் பெறுகிறார்கள். இவ்வளவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறுகிறது. முகாம்கள் என்கிறபோது கொஞ்சம் வசதிக் குறைவாகத்தான் இருக்கும். சமூக நலன் என்கிற அளவுக்கு இந்தக் குறைபாடுகளை ஏற்றுக் கொண்டுதான் பணியாற்ற வேண்டியிருக்கிறது.

திருக்காட்டுப்பள்ளி மருத்துவமனை

*** 646 வினா.—திரு. கோ. இளங்கோவன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருக்காட்டுப்பள்ளியில் அமைந்துள்ள அரசு மருத்துவ மனையினை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கென ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கோ. இளங்கோவன் : அந்த மருத்துவ மனையில் குழந்தைகள் பிரிவு டாக்டரை ஏற்படுத்த வேண்டும், எக்ஸ்ரே கருவி அமைக்கப்படவேண்டும் என்று மாவட்ட அதிகாரி பரிந்துரை செய்திருக்கிறாரா ? ஆம் எனில் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாவட்ட அதிகாரி அப்படி ஒன்றும் பரிந்துரை செய்திருப்பதாகக் குறிப்பு இல்லை. குழந்தைப்பிரிவு என்று தனியாக அங்கே ஏற்படுத்த வசதி இல்லை. ஆனால் குழந்தை மருத்துவத்தில் பயிற்சி பெற்ற டாக்டர் எங்கே இருக்கிறாரோ அங்கே தனியாக அதற்கும்